# ஆயிரக்கணக்கானகுடும்பங்கள் அகதிகளாகின

Registered as a Newspaper in Ceylon ** விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9 இதழ் 88

போன் 889

National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க சித்திரை 27 முஹறம் 29 புதன்கிழமை [10-5-67]

## தென்னிலங்கையில் பெருவெள்ளம்

கொழும்பு, செவ்வாய் தென்னிலங்கையில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பெருவெள்ளம் ஏற்படக்கூடிய ஆபத்து தோன்றியுள்ளது.

காலியிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுவாசல்களை இழந்து அனதைகளாகியுள்ளன.

பத்தேகம, காலி மற்றும் பகுதிகளுடன் போக்குவரத்து, தகவல் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தினுல் சூழப்பட்டுள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுசெல்வதற்கு காலித் துறைமுகத்திலுள்ள படகுகள் உபயோகிக்கப்படுகின்றன. ஹெலிகாப்டர் அனுப்புமாறு காலி அரசாங்க அதிபர் கோரியுள்ளார்.

[6-ம் பக்கம் பார்க்க]

# டாக்டர் ஸாகீர் ஹுசேன் இந்திய ஜனதிபதியானர்

## சுப்பராவைவிட 107773 அதிகவாக்குகள்

### 13-ந் திகதி பதவியேற்பு வைபவம்

புதுடில்லி, மே 9

**இந்தியாவின் புதிய ஜனதிபதியாக டாக்டர் ஸாகிர் ஹுசேன் இன்று தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்க்கட்சிகள் சார்பில் இவருடன் போட்டியிட்ட டாக்டர் சுப்பராவை இவர் 10777 3அதிகப்படியான வாக்குகளால்தோற்கடித்தார்.**

சென்ற 6-ம் திகதி ஜனதிபதி தேர்தலுக்கான வாக்களிப்புநடைபெற்றது. இன்று காலை 10 மணிக்கு தேர்தல் கமிஷனர் திரு. கே. வி. கே. சுந்தரம் தலைமையில் பார்லிமெண்ட் மாளிகையில் வாக்குகள்எண்ணப்பட்டன.

எதிர்க்கட்சிகள் சார்பில் போட்டியிட்ட திரு. சுப்பராவைவிட டாக்டர் ஸாகீர் ஹுசெயினுக்கு107,773[ஒரு லட்சத்து ஏழாயிரத்து எழுநுற்றி எழுபத்திமூன்று] வாக்குகள் அதிகமாகக் கிடைத்தன. டாக்டர் ஸாகீர்ஹுசெயினுக்கு 4,71,744 வாக்குகளும் திரு.சுப்பராவுக்கு 3,63,971 வாக்குகளும் கிடைத்தன.

ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட டாக்டர் ஸாசீர் ஹுசெயினை அரசியல் தலைவர்கள் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

**சுப்பராவ்**

ஜனதிபதவிக்குப் போட்டியிட்ட திரு. சுப்பராவ் பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கையில் புதிய பதவியில் எல்லா வகையினும் வெற்றி கிட்டும் என்றூர். தமக்கு வாக்களித்தமக்கள் பிரதிநிதிகளுக்கும் அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

**ராஜாஜி**

டாக்டர் ஸாகீர் ஹுசெயின் வெற்றி முன்னரே தெரிந்தவிஷயம் என்றூர்.

**அண்ணுதுரை**

தமிழக முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை விடுத்த செய்தியில் டாக்டர் ராதாகிருஷ்ணனைப்போலவே டாக்டர் ஸாகீர் ஹுசெயினும்திறமையும் தகுதியும் உள்ளவரென்றும் இப் பதவிக்குப் போட்டியிருந்த போதிலும் இந்தமுடிவை எல்லா அரசியல் கட்சிகளும் வரவேற்கும் என்று நம்பிக்கைதெரிவித்தார்.

**காமராஜர்**

காங்கிரஸ் அக்கிராசனர் திரு. கு. காமராஜர் விடுத்த செய்தியில் இந்தியாவின் மதச் சார்பற்ற கொள்கையை இந்திய மக்கள் தெளிவாக்கியுள்ளனர் என்றூர்.

**வி. வி, கிரி**

உப ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. வி. வி. கிரி விடுத்த செய்தியில் இந்தியாவின் மதச் சார்பற்ற கொள்கையை உலகத்துக்குத் தெரியப்படுத்தியிருக்கிறதென்றும் இத்தேர்தல் முடிவையிட்டுப் பெருமை கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

## கோயம்புத்தூரில் இடியுடன் பெருமழை

### மரம் விழுந்து பெண் மாண்டார்

கோயம்புத்தூர், மே.9

கோயம்புத்தூரில் இன்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்து இடியுடன் பெருமழைபெய்து கொண்டிருக்கிறது. பெரும் மழையுடன் கடும்காற்றும் வீசுவதால் இங்குபல வீடுகளின் கூரைகள் பிய்த்து எறியப்பட்டன. போக்கு வரத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் வீசிக்கொண்டிருக்கும் கடும் காற்று காரணமாக வேரோடு சரிந்த பெருமரம் ஒன்று பெண் ஒருவர் மீது விழுந்ததாம் அப்பெண் மரத்தால் நசுங்குண்டு ஸ்தலத்திலேயே மரணமானூர்.

## "காந்திஜியின் லட்சியம் வெற்றிபெற உழைப்பேன்"

ஜனதிபதியாக தெரிவு செய்யப் பெற்றதை யொட்டி டாக்டர் சாகிர் ஹுசேன் விடுத்த ஒரு செய்தியில் முதலில் நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

நான் மகாத்மா காந்தியின் சீடனுகவே பொது வாழ்க்கையைத் துவங்கினேன். பொது வாழ்வில் இறங்கும் எவரும் மனத்தூய்மைக்கும் காந்திஜியின் நெறிகளுக்கும் தலையாய மதிப்பு அளிக்க வேண்டும். . காந்திஜியின் லட்சியங்கள் வெற்றி பெற நான் இடைவிடாது உழைப்பேன். அதற்கு நாட்டு மக்களின் ஒருமைப்பாடும் ஒத்துழைப்பும் தேவை' 'என்று அவர் தமது செய்தியில் கூறினூர்.

ஜனதிபதி தேர்தலில் எதிர்க் கட்சி சார்பில் போட்டியிட்ட பழைய தலைமை நீதிபதி சுப்பராவுக்கு தமிழகத்திலும், ஒரிஸாவிலுமிருந்தே பெரும்பாலான ஆதரவு இருந்தது. மற்ற ராஜ்யங்களில் காங்கிரஸ் அல்லாதவர்களும் டாக்டர் ஹுசேனையே பல இடங்களில் ஆதரித்திருக்கிறூர்கள்.

**எலிசபெத் ராணி**

டாக்டர் சாகிர் ஹுசேனுக்கு எலிசபத் மகாராணி இன்று வாழ்த்துக்கள் அனுப்பியுள்ளார். அவருக்கு முதலாவதாக இந்தியப் பிரதமர் இந்திரா காந்திதான் வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

**பதவிப்பிரமாணமும் மரியாதைக்குண்டும**

புதிய ஜனதிபதி பதவியேற்புவைபவம் இம்மாதம் 13-ம் திகதி காலை 8-30 மணிக்கு டில்லி பார்லிமெண்டில் நடைபெறும். அப்போது புதிய ஜனதிபதி பதவியேற்பதற்குமரியாதை செலுத்துமுகமாக 31 பீரங்கிக்குண்டுகள் தீர்க்கப்படும்.

அன்றைய தினமே உப ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. வி. வி. கிரியும் பதவியேற்பார்.

கேளரத்தில் காங்கிரஸிற்கு 9 சட்டமன்ற உறுப்பினர்களே இருந்த போதி

[6-ம் பக்கம் பார்க்க]

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி

## வர்த்தக வகுப்பு மாணவரின் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் வர்த்தக பயிற்சிபெறும் மாணவர்கள் நேற்றுக் காலைமுதல் கல்லூரிக்குச் செல்லாது பகிஷகரிப்பில் இறங்கியுள்ளார்கள். காரணம் இல்லாது கல்லூரி அதிபர் மேற்படி மாணவர்களை வெளியேறுமாறு கூறியதே மாணவர்களது பகிஷ்கரிப்புக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

கடந்தவார இறுதியில் மேற்படி கல்லூரியின் வணிகப்பயிற்சி பெறும்மாணவர்களது ஆண்டுவிழாவின் போது ஏற்பட்ட பஞ்சார கோளாறு சம்பவம் காரணமாகவே இந்தநிலைமை ஏற்பட்டதாகத்தெரிகிறது.

நேற்றுக் காலை முதல் சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவர்களும் கல்லூரிக்குச்செல்லாது கல்லூரிவாசலில் நின்று பகிஷ்கரிப்புச் செய்தார்கள். இது சம்பந்தமாக அதிபர் எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளாவிட்டால் மேற்படி பகுதியைச் சேர்ந்த மாணவர்குழுவொன்று வடமாநில கல்வி அதிகாரியை இன்றுசந்தித்து நிலைமையைத் தெரிவிக்கவிருக்கின்றது.

[ந.தி]

## இரத்ததானம் செய்வோருக்கு சலுகை

யாழ்ப்பாணம், புதன் இலவசமாகஇரத்ததானம் செய்தவர்கள், பற்றுச்சீட்டைக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றால் 'கியூ'வில் நிற்காமலே நேராகச்'சென்று சிகிச்சை பெறலாம்.

இரத்ததானம் செய்வோரின் தொகையை அதிகரிக்கவே மேற்கண்ட சலுகை செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதந்ச் சலுகையை வழங்குவதற்கு நிரந்தரக் காரியதரிசியின் அனுமதிகிடைத்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலவச இரத்ததானம் செய்தவர்களின் சொந்தக்காரர்களுக்கு இரத்தம் தேவைப்பட்டால் உடனடியாக இரத்தம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நட்பு உணர்ச்சியையே நாம் வளர்த்தோமானால், எங்கும் நண்பர்களையே காணலாம். கடவுளுக்கு நண்பனாகி விட்டால், மனிதகுலமனைத்தும், காட்டு மிருகங்கள்கூட நமது நண்பனாகிவிடும். அப்படி எல்லாருக்கும் நண்பரானால் நாம் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்கலாம்!

—சுவாமி ராமதாஸ்.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஆண்டு
சித்திரை மீ 27உ (10-5-67)


## புதிய ராஷ்டிரபதி

ஜனாப் ஸாகீர் ஹுசேன் இந்தியாவின் புதிய ராஷ்டிரபதியாகத் தெரிவு செய்யப்பட்டமைக்காக அவரையும், இந்திய பொதுமக்களையும் சிறப்பாக பிரதமர் இந்திரா காந்தியையும் பாராட்டுகின்றோம்.

ஜனாப் ஹுசேன் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர். அப்பேர்ப்பட்டவரை தங்கள் தேசத் தலைவராக இந்தியா தெரிவு செய்துள்ளதால், இந்தியாவுக்கு மத வெறி கிடையாதென்பது நிருபணமாகிறது. சிறுபான்மை சமூகங்கள் நியாயமான உரிமைகள் மட்டுமன்றி விசேஷ சலுகையும் பெற்று, இந்தியாவிலே கண்யமாக வாழலாம் என்பதற்கு இதைவிடச் சிறந்த அத்தாட்சி வேறு இருக்க முடியாது.

பிரிட்டன், அமெரிக்கா முதலிய ஜனநாயக நாடுகளிலும் கூட, மன்னர் அல்லது ஜனாதிபதி கிறிஸ்தவராகவும் அதிலும் குறிப்பிட்ட ஒரு பிரிவைச் சேர்ந்தவராகவும் தான் இருக்க வேண்டும்மென்று ஒரு சாம்பிரதாயமுண்டு. இந்தியாவிலே பெரும்பாலோர் இந்துக்களாயிருந்தும், ஒரு முஸ்லீமை இந்தியா தன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளதிலிருந்து, இந்திய பொது மக்களின் விரிந்த மனப்பான்மையை உலகம் அறியக்கூடியதாகவுள்ளது. மற்ற நாடுகளுக்கு இதனால் இந்தியா மேலானதோர் வழிகாட்டியாகவும் இருக்கிறது.

இந்துக்களும் முஸ்லீம்களும் வெவ்வேறு தேசீய சமுதாயங்களைச் சேர்ந்தவரென்றும், இருவரும் சேர்ந்து வாழ முடியாதென்றும் கூறி பிரிட்டன், சுதந்திரம் அளிக்குமுன் நாட்டைப் பிரித்தது. பிரிவினையால் பிரச்னை தீருவதற்கு பதில் புதிய புதிய பிரச்னைகள் தோன்றின. சண்டைகள் மூண்டன. இன்னும் அடுத்த போருக்கு ஆயுத முஸ்தீபுகள் செய்யப்பட்டு வருகின்றன. எல்லாம் மத வேற்றுமையை காரணமாகக் கொண்டே, நடக்கின்றன.

இந்நிலையில், இந்தியா பெரிய மனதுடனே ஒரு முஸ்லீமைத் தன் நாட்டுத் தலைவராகத் தெரிவு செய்தது பாகிஸ்தானின் மனப்பான்மையையும் மாற்றவும் இந்தியா—பாகிஸ்தான் பிரச்னைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமாகத் தீர்த்து, உறவுகள் இனிமேம்படவும், வழி செய்ய வேண்டும். அன்பு மூலந்தான் எந்தப் பிரச்னையும் தீரமுடியும்.

மிக மேலான அரசியல் ஞானத்துடன், பிரதமர் இந்திராகாந்தி துணிச்சலுடன் எடுத்துள்ள இந்த நடவடிக்கை வீண்போக முடியாது. இந்தியாவிலுள்ள முஸ்லிம் சமூகத்தவரின் நம்பிக்கையையும் அபிமானத்தையும் இந்திய தலைமை அரசுபெறுவதன்மூலம், பாகிஸ்தான் உள்ளிட்டு அண்டையிலுள்ள நாடுகளின் நன்மதிப்புக்கும் அது பாத்திரமாகியுள்ளது. ஜனநாயகத்திலே ஒரு நாடு ஒற்றுமையுடன் அமைதியாக முன்னேறவேண்டுமாயின் அது சிறுபான்மை சமூகங்களின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் பூரணமாகப் பெறுவதின் மூலமே முடியும். பிரதமர் இந்திராகாந்தி இவ்விஷயமாகக் காட்டியுள்ள மேலான முன்மாதிரி, இலங்கைக்கும் பயனளித்து, இங்கும் சிறுபான்மை சமூகத்தவரின் குறைகள் தீர்ந்து அவர்கள் நிம்மதியாகவும், மகிழ்ச்சியுடனும் வாழ வழிபிறக்குமென்றே நம்புவோம்.

# அமைதியும் எளிமையும் கொண்ட டாக்டர் ஸாகீர் ஹுசெயின்

## இந்தியாவின் புதிய ஜனாதிபதியின் வாழ்க்கை வரலாறு

கடந்த ஐந்தாண்டுகளாக உப ஜனாதிபதி பதவியை வகித்து வந்த டாக்டர் ஸாகீர் ஹுசைன் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான பாரதத்தின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 80 வீதம் இந்துக்கள் வசிக்கும் இந்நாட்டில் முதல் தடவையாக ஒரு முஸ்லிம் இம்மிகப் பெரியபதவியைபெறுகிறார்.

காங்கிரஸ் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிட்ட டாக்டர் ஹுசைன் எதிர்க்கட்சிகளின் கூட்டணியுடன் பலமான போராட்டம் நடத்திய பின்னரே அவர்களுடைய அபேட்சகராகிய முன்னாள் இந்திய பிரதம நீதிபதி திரு. கே. சுப்பராவ்வை தோற்கடித்தார்.

சிறந்த அறிஞரும் கல்விமானுமாகிய இவரை ஸ்ரீ நேரு 1957-ம் ஆண்டில் ஒரு முஸ்லிம் பல்கலைக்கழக உப அத்தியட்சகர்பதவியிலிருந்து பொறுக்கி யெடுத்து பிஹார் ராஜ்யத்தில் கவர்னராக்கினார். அவருடைய எளியதன்மையும், வெளியே காட்டிக்கொள்ளாத. ஆனால் உறுதியான, தேசப்பற்றும்' வாக்குவாதங்களில் சிக்குப்படாமல்பிரிந்துநிற்கக்கூடிய கெட்டித்தனமும் அவரை ஐந்து வருடங்களுக்குப்பின் உப ஜனாதிபதி பதவிக்கு உயர்த்திவிட்டன. இக்குணாதிசயங்களே அவருக்கு நாட்டின் மிகப்பெரியகௌரவமான 'பாரதரத்தினம்' பட்டத்தையும்கொடுத்தன.

சாதாரண வாழ்க்கையில் அவர்மிக்வும் சாதுவான படாடோபமில்லாத, சமய பக்தி நிறைந்த ஒருமனிதர்.

ஆனால் வகுப்பு வாதம் என்பது அவரிடம்துளி கூட கிடையாது. இலக்கியத்திலும் நுண்கலைகளிலும் மிகவும் ஈடுபாடு கொண்டவர். பலநூல்கள் எழுதியுள்ளார்' பிளேட்டோவின் 'குடியரசு' போன்ற பல பிற மொழி நூல்களை மொழி பெயர்த்தும் இருக்கிறார். ஜேர்மனியில் உயர் தரக்கல்வி கற்ற டாக்டர்ஹுசைன் ஜேர்மன் மொழியில் சரளமாகப்பேசுவார். பட்டாணியர்பரம்பரையில் வந்தவராகையால் புஷ்டு மொழியும் தெரிந்தவர்.

காந்தீய எளிமையுள்ள டாக்டர்ஹுசைன் இயற்கையை ரசிப்பவர். தோட்டம் செய்வதில் ஆர்வம் மிக்கவர். ரோஜா என்றால் அவருக்கு உயிர். 200 வெவ்வேறு வகையான ரோஜா புஷ்பங்களை உப ஜனாதிபதி வாசஸ்தலத்தில் காணலாம் தோட்டத்தில் திராட்சை செடிகளும் வளருகின்றன.

காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே தரமான எதிர்ப்பு இருந்தும் பிரதமர் இந்திரா காந்தியே டாக்டர் ஹுஸேனின் அபேட்சகத்தை ஆதரித்தார். ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் குழுவில் காங்கிரசுக்கு ஆக 52.8 வீத பலமே இருந்தது. ஆகவே காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜ் உட்பட வேறு சிலர் டாக்டர் ஹுஸேனை நிறுத்திதோல்வி போக விரும்பவில்லை.

திருமதி காந்திக்கு இதுஒரு பெரிய பலப் பரீட்சையாகிவிட்டது. தாம் ஆதரிப்பவரின் தோல்வி தமக்கே தோல்வியாகமுடிந்து அதன் விளைவாக மத்திய அரசாங்கத்தில் நெருக்கடி ஏற்படலாமென்பதை அவர் உணர்ந்திருந்தார். எனவே அவரும் அவருடைய ஆதரவாளர்களும் டாக்டர் ஹுஸேனை பலமாக ஆதரித்து, அவருடைய தோல்வி கட்சிக்கும் நாட்டின் மதசார்பற்ற கொள்கைக்கும் பாதகமாக முடியுமென்றும் வாதாடினார்கள்.

ஒரு முஸ்லிம் இந்தியாவின் ஜனாதிபதியாகவும், இராணுவத்தின் மகா சேனாதிபதியாகவும், முதல் பிரஜையாகவும் வந்தது வெளி நாடுகளின் கவனத்தை ஈர்த்ததுடன், உள்நாட்டு வைதிக இந்துக்களிடையே சற்றுகலவரத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது.

1947-ம் ஆண்டில் இந்து—முஸ்லிம் வகுப்புக் கலவரங்களும் 1965-ம் ஆண்டில் இந்தியா — பாகிஸ்தான் மோதலும் இன்னும் இந்துக்களின் மனதில் பதிந்திருக்கிறது. ஆயினும் டாக்டர் ஹுஸேன் இந்தப் பதவிக்கு சாலவும் பொருத்தமானவர் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது உபஜனாதிபதியாயிருந்தபோது அவர் ஸ்தாபித்த வெளிநாட்டு தொடர்புகளும் நட்புகளும் இப்புதிய பதவியில் அவருக்கு மிகவும் உதவியாயிருக்கும்.

எல்லாவற்றிலும் மேலாக, காங்கிரஸ்கட்சி, பொதுத் தேர்தலில் பெரும் தோல்வி அடைந்தபோதிலும், நாட்டுக்கு முக்கியமான விஷயங்களில் ஒற்றுமையாய் நிற்க வல்லது என்பதை டாக்டர் ஹுஸேனின் வெற்றி நிருபித்துவிட்டது. அவருடைய தோல்வியினால் ஏற்பட்டிருக்கக்கூடிய அரசியல் குழப்பத்தையும் இந்தியா இப்பொழுது தவிர்த்துவிட்டது.

# 'கொழும்பில் இந்துக்களுக்கு மாமண்டபம் அவசியம்'!

## அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

'பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் வாழும் கொழும்பு மாநகரத்தில் ஏனைய சமய சங்கங்களைப்போல் இந்துக்களுக்கும் விடுதி வசதிகள் அமைந்த ஒரு இந்து மாமன்ற மண்டபத்தை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரி அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரான திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராசாவுக்கு திருநெல்வேலி கிழக்கு இந்து இளைஞர் இயக்க இணைச் செயலாளர் திரு. எஸ். திருச்செல்வம் அனுப்பி வைத்துள்ள மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''இந்துசமயப்பற்று பெருகிவரும் இந்நாளில் சமய வளர்ச்சிக்காக இந்து சமயச்சங்கங்கள் ஆற்றும் சேவை வேண்டற்பாலது. ஆகையால் இப்பெரும் குறையை நீக்க அகில இலங்கை இந்துமாமன்றம் மற்றைய இந்து சமய அபிவிருத்திச்சங்கங்களுடன் தொடர்பு கொண்டு மண்டபம் அமைக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.''

[5-ம் கலத்தொடர்ச்சி]

இதெல்லாவற்றையும் உணராமல் பேசி, அநாவசியமாக சிங்கள மக்களிடையே வீண் பீதியையும் திகிலையும் கிளப்பி விட்ட மஹாநாயக தேரோ, மேலேயுள்ளசெய்தியைப்பமர்த்தாவது மனச்சாந்தி கொள்வாரா?

அல்லது, நண்பர் ஒருவர் கூறியதுபோல, தேரோ அவர்கள் ஊதிய அபாயச் சங்கை கேட்டபின்னர்தான் மேலே சொல்லப்பட்ட [illegible] மாகத் தெரிவு செய்யப்பட்டனவா?

—வழிப்போக்கன்

## குருபூசை

புன்னாலைக்கட்டுவன், செல்,

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கொண்டாடப்பட்டபோது பண்டிதர் தவமலர் சின்னத்துரை பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டார். பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் தலைமை வகித்தார்.

ஃ ஃ ஃ

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கொண்டாடப்பட்டது. பண்டிதை சின்னத்தம்பி இலட்சுமி சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டார்.

ஃ ஃ ஃ

கட்டைவேலி, செவ்வாய்

கட்டைவேலி மெதடிஸ்த பாடசாலையிலும், வடகரவை இந்துமாமன்ற ஆதரவில் வதிரி உல்லியனொல்லை அம்பாள் ஆலயத்திலும் திருநாவுக்கரசர் குருபூசை கொண்டாடப்பட்டது. மா வேதாரணியக் குருக்கள் பூசைகளை நடாத்தினர்.

## நாட்டிலும் நகரிலும்

அடுத்த பத்து வருடங்களுக்குள் 55,000 மணமான தம்பதிகளுக்கு குடும்பக்கட்டுப்பாட்டு போதனையும், அதற்கு வேண்டிய சிகிச்சையும் வழங்க நமது சுகாதாரப்பகுதி திட்டமிட்டிருக்கிறது.

சனத்தொகை வீக்கத்தை தடுப்பதற்கு உலகத்திலுள்ள நாகரீக நாடுகள் எல்லாம் இப்படி குடும்பக்கட்டுப்பாட்டு முயற்சிகளில் முனைந்துள்ளன. ஆகையால் இச்செய்தியில் புதுமை ஒன்றுமில்லை.

ஆனால் இச்செய்தியின் அடுத்த வசனத்தைப்பாருங்கள்! வவனியா, மட்டக்களப்பு, புத்தளம், பதுளை ஆகிய இடங்களில்குடும்பக்கட்டுப்பாட்டை நடத்துவதற்கு இவ்வருடம் ஒக்டோபர் மாதத்திற்கிடையில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுமாம். தெரிவுசெய்யப்பட்ட இடங்களைக்கவனிக்க வேண்டும்!

வவனியாவிலும், மட்டக்களிப்பிலும், தமிழரே பெரும்பான்மையோர். புத்தளத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையோர். மட்டக்களப்பிலும் அவர்களே இரண்டாவது பெரிய தொகையினர். புத்தளத்தில் நிறைய தமிழர்கள் வசிக்கிறார்கள்.

இதிலென்ன புதுமை என்றுகேட்கிறீர்களா?

சிலநாட்களுக்கு முன்பு கண்டியில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் மதிப்புக்குரிய ஒரு மஹாநாயக தேரோ சுவாமியார் பின்வருமாறு கூறினார்: 'சிங்கள இனத்துக்கு ஆபத்து வந்திருக்கிறது. சிங்கள பெண்கள் கருத்தரிக்காமல் இருப்பதற்கும், தமிழ்ப் பெண்கள் நிறைய சந்தான விருத்தி செய்வதற்கும் ஒரு திட்டமிட்ட இயக்கம் நடந்துவருகிறது. இது வெற்றி பெறுமானால் இன்னும்பத்து வருடங்களுக்குள் சிங்கள இனம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்!

'நாம் சிங்களவர்' என்ற இயக்கத்தில் இப்பேச்சு நிகழ்ந்தபடியினால் தேரோ அவர்கள் இப்படி உணர்ச்சி வசப்பட்டு உளறித்தள்ளினரோ என்று நாம் அதைப் பொருட்படுத்தாமல் இருந்துவிடலாம் ஆனால்அதைக் கேட்டுக்கொண்டிருக்கும் சிங்கள பாமர மக்கள், தேரோ திருவாய்மலர்ந்தருளியிருப்பது தேவவாக்காய்த்தானிருக்க வேண்டுமென்று நினைத்து, அதை முழுசாக விழுங்கிவிட்டால், அங்கேதான் வகுப்புவாதம் என்ற விஷப்பாம்பு வீளைகிறது.

சுகாதாரப்பகுதியில் குடும்பக்கட்டுப்பாட்டு பிரிவிலுள்ள அத்தனை டாக்டர்களும், அப்போதிக்கரிகளும், நேர்ஸ்மாரும், மற்றும் சிப்பந்திகளும், நூற்றுக்குநூறு தமிழராயிருந்தால் ஒரு வேளை மஹாநாயக தேரோ எதிர்பார்த்தது நடக்கக் கூடுமென்று சொல்லலாம். அப்படியல்லவே. அதிலுள்ள சிங்கள உத்தியோகஸ்தர்கள் இப்படியான திட்டமிடப்பட்ட இயக்கத்துக்கு உடன்பாடாய் இருப்பார்களா?

குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கம் தேசியரீதியில், தேசிய நன்மைக்காக, சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர் என்ற பாகுபாடில்லாமல் நடக்கும் ஓர் இயக்கம். சிங்களவர்களுக்குக் கொடுக்கும் குளிகைகளுக்கும் மருந்துகளுக்கும் ஊசிகளுக்கும் தமிழர்களுக்குக் கொடுக்கும் மருந்து வகைகளுக்கும் வித்தியாசம் இருக்கப்போகிறதா?

[3-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பணியவைக்கும் நோக்கத்துடன்

# இந்தியா மீது அமெரிக்க நிபந்தனை கிடையாது

— சாக்ளா

சிங்கப்பூர், மே. 9

**இந்தியாவின்மீது நெருக்கடிநிலையை உண்டாக்கி தனது நிபந்தனைகளுக்கு பணியவைக்க அமெரிக்கா முயற்சி மேற்கொண்டு வருவதாக சொல்லப்படுவதைத் தாம் மறுப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் சக்ளா இங்கு தெரிவித்தார்.**

**சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ள திரு. சக்ளா நிருபர்களுக்களித்த பேட்டியின்போதே மேற்கண்டவாறு கூறினர்.**

இந்திய மண்டல சார்பற்ற கொள்கையையே கடைப்பிடித்துவர விரும்புகிறது எனத் தெரிவித்த சக்ளா மேலும் கூறியதாவது:—

''உண்மையான பொருளாதார அபிவிருத்தியடைவதற்காக தென்கிழக்காசிய நாடுகள் தமக்குள் நல்ல ஐக்கியத்தை ஏற்படுத்தி ஒத்துழைக்கவேண்டும். இவ்வித ஒத்துழைப்பால் இந்த நாடுகள் மேலும் வலுவடையலாம்.

இந்தியாவைப் போன்றே சிங்கப்பூரும் சோஷலிஸ சமுதாயம் உருவாக உழைத்து வருவதாக நம்புகிறேன். இதன்மூலம் இந்த நாடுகளின் மக்கள் அதிக நன்மையைப் பெறமுடியுமென நம்புகிறேன். தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையில் மேலும் ஐக்கியம் வலுப்பெறுவதாக உருவாக்கப்படும் எந்தத் திட்டத்துக்கும் இந்தியா தனது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கும்'' என அவர் எடுத்துக் கூறினர்.

அமெரிக்காதயாரித்துள்ள அணு ஆயுத தடை ஒப்பந்தத்தை இந்தியா ஏற்றுக் கொள்ளாது' என அவர் ஒருகேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## சுதந்திராக்கட்சியின் தீர்மானம்

தஞ்சை, மே 9

'பஸ் போக்குவரத்தை அரசாங்கம் பொறுப்பேற்கக்கூடாது' என்று சுதந்திராக் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தஞ்சை மாவட்ட சுதந்திராக்கட்சி மகாநாடு தஞ்சாவூரில் நடந்தபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிலவரியை உடனே நீக்க வேண்டுமென்றும் நிலவரியை ரத்துச் செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்பட்டு உணவு உற்பத்தி பெருகுமெனத் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

# ‘உள்நாட்டுப் போரை நிறுத்துங்கள்’

## சீனப்பத்திரிகை வேண்டுகோள்

பீகிங், மே. 9

உள்நாட்டுக் குழப்பங்களையும், போரையும் ஒரு முடிவுக்குக் கொண்டுவருமாறு சீன கம்யூனிஸ் கட்சிப் பத்திரிகையான 'பீக்கிங் பீப்பிள்ஸ் டெய்லி' என்ற பத்திரிகை வேண்டுகோள்விடுத்துள்ளது.

செங்காவல் படையினர் அப்படை உருவாக்கப்பட்ட நோக்கத்திலிருந்து விலகிச் செல்வதாகவும் இது தடை செய்யப்படவேண்டுமெனவும் அப்பத்திரிகை எடுத்துக் கூறியுள்ளது.

உள்நாட்டுக் குழப்பங்களை வளரவிட்டுக் கொண்டிருந்தால் நாட்டுக்கு அது கேட்டையேதேடித்தருமாதலால் இவ்விதகுழப்பங்களை தாமதமின்றி நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் 'பீக்கிங் பீப்பிள்ஸ் டெய்லி, கோரிக்கை விடுத்துள்ளது.

# அண்ணுவுக்கு உருவச்சிலை காஞ்சீபுரத்தில் அமைக்கப்படும்

காஞ்சீபுரம், மே. 9

தமிழக முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரைக்கு அவரது சொந்த ஊரான காஞ்சீபுரத்தில் உருவச்சிலை அமைக்கப்படவிருக்கிறது.

காஞ்சீபுரம் நகரசபைக் கட்டடத்துக்கு முன்பாக அண்ணுதுரைக்கு சிலை அமைக்கவேண்டும் என்று நகரசபை தீர்மானித்திருந்ததைத் தொடர்ந்தே உருவச்சிலை அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உருவச்சிலை அமைப்பதற்கான நகரசபையின் தீர்மானத்தை அரசாங்கமும் ஏற்றுள்ளது.

அண்ணுவின் உருவச்சிலை எந்தமாதிரி அமைக்கவேண்டும், அதற்கான பணத்தை எப்படித் திரட்டுவது என்பது குறித்து ஆராய நகர பிரமுகர்களின் கூட்டம் ஒன்றை நகரசபைத் தலைவர் திரு. ஏ. கே. தங்கவேலு முதலியார் கூட்டியுள்ளார்.

## இந்தி எதிர்ப்பு மகாநாடு

கோடைக்கானல், மே 9

மாணவர்இந்திஆதிக்கஎதிர்ப்புமகாநாடு கோடைக்கானலில் வரும் 29, 30-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது

இம்மகாநாட்டில் தமிழக முதலமைச்சர் திரு. அண்ணுதுரை, ராஜாஜி, இரா. நெடுஞ்செழியன், திரு. மு. கருணநிதி, திரு. மதியழகன், திரு. மாதவன், திரு. சி. பா' ஆதித்தஞர், திரு. ம. பொ. சிவஞானம், திரு. இ. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் கலந்துகொள்வார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

## 150, 000 இளைஞர்களுக்கு

### கோமகன் பரிசுகள்

லண்டன், மே. 9

10 வருடங்களுக்கு முன் பாகஎடின்பேர்க் கோமகன் பரிசுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த சுமார் 150, 000 இளைஞர்கள் பரிசு பெற்றிருக்கிருர்கள். நேற்று லண்டனில் வெளியாகிய எடின்பேர்க் கோமகன் பரிசுத் திட்டம்பற்றிய வருடாந்த அறிக்கையில் இந்தவிபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

''14 வயது தொடக்கம் 20வயதுவரையிலான இளைஞர்கள் இந்தப்பரிசுத் திட்டத்தில்பங்குபற்றலாம். இளைஞர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த ஊக்குவிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்'' என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கேரளத்தில் மாணவருக்கு வரி

திருவனந்தபுரம், மே 9

கேரளத்தில் 5, 6, 7-ம் வகுப்புகளில் உள்ள மாணவர்கள் ஆண்டுக்கு தலா 2 ரூபா செலுத்தவேண்டும். மேல் வகுப்புகளில் உள்ள மாணவர்கள் தலா 3 ரூபா வரி கட்டவேண்டும்.

இப்புது வரி மூலம் ஆண்டு தோறும் 40 லட்சம் ரூபா வருமானம் கிடைக்குமென அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இப்பணம் பாடசாலைக் கட்டடங்கள் பராமரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டொன்றுக்கு ரூபா 1200க்குக் குறைந்த வருமானமுள்ள பெற்றோர்களின் குழந்தைகளுக்கு இத்தீர்வை கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூர்த்தியாகும் ஆஸ்பத்திரி

இமையாணன், செவ்.

வல்லையில் கட்டப்பட்டு வரும் ஆஸ்பத்திரி மிகவிரைவில் திறந்து ஆரம்பிக்கப்படவிருக்கிறது எனத்தெரிய வருகிறது. இதற்குரிய கட்டிட வேலைகளும், மற்றும் வேலைகளும் பூர்த்தியாகிவருகின்றன. கூட்டுறவு மூலம் கட்டப்பட்டுவரும் இவ் வைத்தியசாலையில் பிரசித்தி பெற்ற சிறந்த டாக்டர்கள் கடமையாற்றுவார்கள் என அறியப்படுகிறது. இவ்வைத்தியசாலை வடபகுதியிலேயே மிகப்பெரிய சிறந்த வைத்தியசாலையாக அமையும் என நம்பப்படுகிறது.

## ஆலய உற்சவம

இமையாணன், செவ்.

தொண்டமானறு வீரமாகாளியம்பாள் கோயிலின் இவ்வருடத்திய உற்சவங்கள் நாளைதொடக்கம் ஆரம்பமாகி நடைபெறும். இம்மாதம் 22-ந் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும், அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

# காமன்வெல்த்திலிருந்து பிரிட்டன் விலகாது

## பிரிட்டிஷ் மந்திரி உறுதி

லண்டன், மே. 9

பிரிட்டன் ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேர்ந்து கொள்வதென்று செய்து கொள்ளப்பட்டுள்ள முடிவு காமன்வெல்த்துகளுடன் உறவுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடாது எனவும் காமன்வெல்த்திலிருந்து பிரிட்டன் விலகிச்செல்லாது என்றும் பிரிட்டிஷ்-காமன்வெல்த் உறவு மந்திரி திரு. பௌடன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேருவதற்கு விண்ணப்பித்துக் கொள்வதென அரசாங்கம் செய்துள்ள தீர்மானம் பார்லிமெண்டின் அங்கீகாரத்துக்காக நேற்று சமர்ப்பிக்கப் பட்டபோதே காமன்வெல்த் உறவுமந்திரி திரு. பௌடன் மேற்கண்டவாறு கூறினர்.

ஸ்திரமான நிலையில் தான் ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேருவதற்கு பிரிட்டன் முடிவு செய்துள்ளது' என பிரதமர் வில்சன் எடுத்துக்கூறினர்.

அசாமில்

## பொலிஸ் - பொதுமக்கள் மோதல்; 3 பேர் மாண்டனர்; 36 பேர் காயம்

அசாம், மே 9

அசாமிலுள்ள தேஷ்பூரில் நேற்று பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் 3 பேர் மாண்டனர்: 36 பேர் காயமுற்றனர். இதில் 24 பேர் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் 3 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேஷ்பூரில்மீண்டும்மாமூல் நிலைமையைக் கொண்டுவருவதற்கு சகலவித ஒத்துழைப்பையும் தருமாறு அரசாங்கம் மாணவர்களைக்கேட்டுள்ளது

# இலங்கை-இந்திய ஒப்பந்தம் அமுல் மசோதா

## மகாசங்கத்துடன் பிரதமர் பேசுவார்

கொழும்பு, புதன்

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவை தேசிய தலைவர்களுடன் விவாதிக்க பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா சம்மதித்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் மே 15-ம் திகதியன்று மகாசங்கத்துடனும். மற்றும் தலைவர்களுடனும் மசோதா பற்றி ஒரு மணித்தியால மகாநாடொன்றில் கலந்து கொள்ள பிரதமர் விருப்பம் தெரிவித்துள்ளதாக மகாசங்கபெரமுனவின் காரியதரிசி வண. மீத்தலெகொட குணரத்னதேரோ அறிவித்துள்ளார்.

உத்தேச மசோதாபற்றித் தாம் பிரதமருக்கு அனுப்பியிருந்த மகஜரொன்றின் பயனுகவே இந்த மகாநாடு நடைபெற விருப்பதாக வண. குணரத்ன தேரோ தெரிவித்தார்.

இலங்கை-இந்திய பிரச்னையின் பாரதூரமான விளைவுகள் பற்றிக் குறிப்பிட்டு, இவ்விஷயத்தில் ஒரு முடிவு எடுக்க முன்னர், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்னை சம்பந்தமாக மக்களின் சகல பிரிவுகளினதும் அபிப்பிராயங்களும் கவனமாகப் பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று அம்மகஜர் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் தலைதூக்கி நிற்கும் பிரச்னைகள் மொழி, மதம், இனம் சம்பந்தப்பட்ட தேசிய, உணர்ச்சிமயமான பிரச்னைகளேயன்றிப் பொருளாதாரப் பிரச்னைகளல்ல வென்பதையும் மகஜர் குறிப்பிட்டுள்ளது.

உத்தேச மாவட்டசபை மசோதாபற்றியுப் வண. குணரத்னதேரோவின் மகஜரில் கூறப்பட்டிருக்கிறது.

## நியுயோர்க்கில் இந்திய புகைப்பட கண்காட்சி

நியுயோர்க், மே 9

இந்தியாவிலுள்ள புராதன, நவீன சின்னங்களை வர்ணப் படங்களில் எடுத்து அவற்றைக் கொண்ட கண்காட்சி ஒன்று இன்று இங்குள்ள அமெரிக்க நூதனசாலையோடிணைந்தஇயற்கை சாஸ்திரப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டது.

உலகிலுள்ள நூதனசாலைகளுள் மிகவும் பெரிதாக இந்நூதனசாலையைக் கணிக்கிருர்கள்.

சிக்காகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மகளிர் சங்கத்தின் ஆதரவுடன் கடந்த வருடம் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்த ஜொவான் மக்லேசுவிப்ட் எடுத்த வர்ணப் புகைப்படங்களைக் கொண்டதாகவே இக்காட்சி நடைபெறும். தனது இந்திய சுற்றுப்பிரயாணத்தின்போது, ஜொவான், பம்பாய்க்கு அருகாமையில் உள்ள புராதன இந்துக் கோவில்களைப் பார்த்தார். தென்மேற்குப் பகுதியில் உள்ள துறைமுகப் பட்டணமான கொச்சின், கிழக்கிலுள்ள சென்னை அதன் சுற்றுப்புறங்கள், அக்ரா, மற்றும் முக்கியமான நகரங்களையும் பார்வையிட்டு படங்களைப் பிடித்தார். காட்சிக்காக வைக்கப்படவிருக்கும் படங்களைப் பற்றி நூதனசாலையிலுள்ளவர்கள் கருத்துரை வழங்கும்போது, படங்கள் யாவும் புராதன இந்தியாவினதும் நவீன இந்தியாவினதும் காட்சிகளை அழகிய சித்திரங்களில் வடித்துக் காட்டுவனபோலிருக்கின்றன என்று கூறினர்கள்.

## நெசவு நிலையம் திறக்கப்பட்டது

நாரந்தனை, செவ்வாய்

தீவுப்பகுதி கூட்டுறவு சங்கங்களின் சமாஜத்தினுல் வேலணையில் அமைக்கப்பட்ட 28 கைத்தறிகளைக் கொண்ட நெசவு நிலையமொன்றை வடமாகாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் திறந்துவைத்தார்.

### சங்கத்தின் முயற்சி

நாரந்தனை, செவ்வாய்

கயரோக நிவாரண சங்கத்தின் புங்குடுதீவுக் கிளையினர், புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக் கண்மையில் கயரோக சிகிச்சை நிலையமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனலைதீவு மக்களுக்கு அரசாங்க அதிபரின் பாராட்டு

நாரந்தனை, செவ்.

அனலைதீவில் உணவு உற்பத்திக் குழுவினரால் மே தினத்தன்று நடத்தப்பட்ட மேற்படி குழுவின் பொதுக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகர, முன்னைநாள் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. விநாயமூர்த்தி தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. பற்றிக் ஆகியோர் கலந்துகொண்டு உணவு உற்பத்தி சம்பந்தமான சொற்பொழிவை நிகழ்த்தினர்.

உணவு உற்பத்திக் குழுவின் தலைவர் திரு. வே. பொன்னுத்துரை பேசுகையில் ''யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு பகுதியில் உள்ள விவசாயிகளுக்கும், அனலைதீவு விவசாயிகள் தாழ்ந்தவர்களல்லவென்றும், உணவு உற்பத்தியிலும், உபஉணவுப் பயிர்ச் செய்கையிலும் அனலைதீவுமக்கள் அதிக சிரத்தைகாட்டி வருகிறார்கள் என்றும், அரசினர் உதவி கிடைத்தால், அவர்கள் உணவு உற்பத்தியில் முன்னணியில் திகழ்வார்கள்'' என்றும் கூறினர்.

அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராபேசுகையில், அனலைதீவு மக்களின் உடலுழைப்பு தம்மை வெகுவாகக் கவர்ந்துள்ளதெனவும் நாட்டின் முன்னேற்றத்திற்கு இவ்வித உழைப்பு மிகவும் அவசியமெனவும் அவர்கள் குறைகளை விரைவில் நிவிர்த்தி செய்ய ஏற்ற நடவடிக்கையை தாம் எடுக்கவிருப்பதாகவும் உறுதிகூறினர்.

அரசாங்க அதிபரிடம் உணவு உற்பத்திக் குழுவினர் மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தனர்.

## "கோவில் தொண்டு செய்க"

தெல்லிப்பளை, செவ்.

'திருநாவுக்கரசு நாயனரின் தேவாரங்கள் வெறும் பக்தியை மட்டும் ஊட்டுவன அல்ல மான உணர்வும், சுதந்திர வீறும் ஊட்டுவனவாக அவருடைய தேவாரங்கள் திகழ்கின்றன. என வீமன்காமம் ஆங்கில பாடசாலையில் நடைபெற்ற திருநாவுக்கரசு நாயனர் குருபூசை விழாவில் உரையாற்றிய கவிஞர் வி. கந்தவனம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றில் மாணவர்கள் பின்பற்றக் கூடிய அம்சங்கள் பல உண்டென்றும், உழவாரத்தையேந்தி கோவில்கள் தோறும் சென்று கோவில்களைத் தூய்மையாக வைத்திருக்க அரிய திருத்தொண்டாற்றிய அப்பர் சுவாமிகளைப் பின்பற்றி இக்கால இளைஞர்களும் தத்தம் ஊர்களிலுள்ள கோவில்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்கேற்ற தொண்டுகளை ஆற்ற முன்வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# 'இலங்கை கல்வி முறை மாற்றப்படல் வேண்டும்'

## ஸ்கந்தா பழையமாணவர் தினத்தில் உதவி கல்வி அதிகாரி

சங்கானை, செவ்வாய்

'இலங்கையில் இன்றைய கல்விமுறை மாற்றி அமைக்கப்பட்டு நாட்டிற்குவேண்டிய தேசியக் கல்விமுறை ஆக்கப்படவேண்டும். கல்விமுறை மாறாத காரணத்தால் வருடந்தோறும் பல ஆயிரக்கணக்கானோர் படிப்பு முடிந்தவுடன் வேலையில்லாது அலைகின்றனர். பல நூற்றுக்கணக்கானோர்பட்டதாரிகளாகி வெளிக்கிளம்புகின்றனர். ஆண்டுகள் தோறும் பல்கலைக் கழகத்திலிருந்து இவர்களுக்கு வேலைவாய்ப்புக்கிடைக்கிறது பெரும்கஷ்டமாக இருக்கிறது. இதற்கு கல்விமுறை மாற்றப்படாமையே காரணம்' என வவனியா மாவட்ட உதவிக் கல்வியதிகாரி திரு. எஸ். சந்திரசேகரம், திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற பழைய மாணவர் தினக்கொண்டாட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் இக்காலத்தில் அரசாங்கம் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருவது பாராட்டவேண்டியது நல்ல தொழில் செய்யக் கூடியவகையில் மாணவர்கள் பயிற்றப்பட்டால் எதிர்காலத்தில் வேலையில்லாப் பிரச்னை தீர்ந்துவிடுவதுமல்லாமல் நாட்டின் சுயதேவை பூர்த்திசெய்யவும் உதவும். இதனுல் கல்விமுறை மாற்றப்பட்டால் சகல விதத்திலும் நாடு முன்னேற்றம் அடையும் எனக் கூறினர். மற்றும் திரு. எஸ். முருகேசு ஆகியோரும் பேசினர்.

# ஊரெழுவுக்கு நூல் நிலையம்

புன்னாலைக்கட்டுவன், செவ்.


ஊரெழுப் பகுதிக்கென ரூபா 20,000 செலவில் ஒரு மத்திய நூல்நிலையமும், கலையரங்கு மண்டபம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்னும் தீர்மானம் நேற்று மாலை தலைவர் திரு. எஸ். கதிரவேலு தலைமையில் நடைபெற்ற ஊரெழுகிராம முன்னேற்றச் சங்கக்கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது. இங்கு நவீன வசதிகள் அமைந்த ஒரு சந்தையும் உருவாக்கப்படவிருக்கிறது.

# இடி விழுந்து பெண் மரணம்

அவிசாவளை, செவ்.

இப்பகுதியில் பெய்தகடும் மழை காரணமாகப் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ரப்பர் தோட்டங்களில் ரப்பர் மரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளன.

உக்வந்த என்ற இடத்தில் ஒரு வீட்டின்மீது இடி வீழ்ந்ததால் நடுத்தர வயதுடைய பெண்ணொருவர் ஸ்தலத்தில் பரிதாப மரணத்திற்குள்ளானர். பல குடிசைகள் பேய்க் காற்றுக்குப் பலியாகியுள்ளன. தொலை பேசிக்கம்பங்களும் சரிந்துவிட்டதால் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.




ASTHMA DROPS
SATHYALYAM'S



இளைப்பு [ஆஸ்த்மா] நோயை விரைவில் சுகப்படுத்தும் நவீன மருந்து. நாளுவிதமான இருமல்கள், க்ஷயரோகம், நெஞ்சுச்சளி, [ப்றேங்கைடீஸ் முதலியவைகளுக்கும் சிறந்தது. ஊசி மருந்தாலும் Injection தற்கால சாந்தியாவதும் செய்ய முடியாதபடி மூச்சுத் திணறல் ஏற்பட்டிருக்கும், மிகக் கடுமையான நிலைமையிலும், இம்மருந்தை ஒருமுறை கொடுத்தாலும் குணம் கிடைக்கிறது. பொறுக்க முடியாத வருத்தங்களையும், துன்பங்களையும் உண்டாக்கும் இக் கொடிய வியாதியை [ஆஸ்த்மா] நீண்ட காலமாகாமலிருந்தால் விரைவிலும், மிகவும் நாள்பட்டவைகளானலும் சில வாரங்கள் தொடர்ந்து சாப்பிடுவதாலும், திரும்பி வராதபடி சம்பூரணமாகக் குணப்படுத்துகிறது. ஆஸ்த்மா வியாதிக்கு இது ஒரு சிறந்த மருந்து என்பதைப் பாவிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும்.

அளவு:- 15—20—சொட்டுகள் தினம் இருமுறை.

விலை. 1 அவுன்ஸ்- ரூ. 7 -- ச. 50

வடமாகாண ஏஜன்டுகள்:-

எஸ். சுப்பிரமணியம் & கோ,
53, கே. கே. எஸ். றேட்,
யாழ்ப்பாணம்.

க. செ. கைலாசபிள்ளை & சன்ஸ்,
76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

க. செ. கணபதிப்பிள்ளை & சன்ஸ்,
51, கே. கே. எஸ். றேட்,
யாழ்ப்பாணம்.

ஆ. இராசையா & சன்ஸ்,
69, கே. கே. எஸ். றேட்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: எல்லாவித வியாதிகளுக்கும் வைத்தியம்செய்யப்படும்.

தயாரிப்பாளர்கள்:-

80, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி காரியாலயத்தில் இரு காற்றுடிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலிருக்கும் கல்விக்காரியாலத்தில்இரு காற்றுடிகள் மட்டுமே இருப்பதால் இங்கு கடமையாற்றும் பல ஊழியர்கள்வெப்பநேரத்தில் மிகக் கஷ்டப்பட வேண்டியிருப்பதாக அறியப்படுகிறது.

தற்போது கல்விக்காரியாலயம் இயங்கி வரும் கட்டடம் தனியார் ஒருவருக்குச் சொந்தமானதாகையால் சகலவசதிகளையும் எதிர்பார்க்கமுடியாதெனவும் கல்வி இலாகாவால் யாழ்ப்பாணத்தில் கல்விக்காரியாலயம் அமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட நிதியைக்கொண்டு புதிய கட்டடம் அமைக்க விரைவான நடவடிக்கை மேற்கொண்டால் இவ்விதம் ஊழியர் கஷ்டமுற வேண்டிய நிலைஇருக்கமாட்டாது எனவும் கருதப்படுகிறது.





லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர். மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது. ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற் கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான முதற்றர பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது; இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

**மில்லர்ஸ்**

லிமிட்டெட்.

GRANT


3×9

## மாணவர் கழகம்

நாரந்தனை, செவ்வாய் புங்குடுதீவில் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு 'மாணவர் கழகம்' ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதன் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திரு. செ. ஆனந்தராசா, உபதலைவர்: திரு. பொ. யோகநாதன், செயலாளர்: திரு. அரியரத்தினம், பொருளாளர்: திரு. மன்மதராசன். நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம். புதன் அர்ச். ஆரோக்கியநாதர் சன சமூக நிலையத்தின் ஆண்டு விழா உள்ளூராட்சி ஆணையாளர் திரு. டிடன்போத் தலைமையில் நடைபெற்றது.

சன சமூக நிலையங்களின் அவசியத்தையும் அதன் நிர்வாகிகளின் பொறுப்பையும் பற்றி திரு. நல்லையா பேசுகையில், நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும் சமூக சேவை மனப்பான்மை படைத்தவர்களின் கையில் தான் தங்கியுள்ளதெனக் குறிப்பிட்டார்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

**புதன் 10 - 5 - 67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-4 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர்நிகழ்ச்சி — 'ஓடி விளையாடு பாப்பா'.

இரவு 6-15 பாட்டு, 6-45 கிராமசஞ்சிகை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கருத்தரங்கம், 9-45 வாத்திய இசை, 10-00 நேயர்விருப்பம்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டையிடும் பருவம்:
வழக்கமான விலை ரூபா பதினைந்து. அறிமுகப்படுத்தும் விலை ரூபா பத்து. இச் சலுகை இருபதுநாட்களுக்கு மாத்திரம். அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 2391

கூவும் சேவல்:
வழக்கமான விலை ரூபா ஆறு — அறிமுகப்படுத்தும் விலை ரூபா நாலு. அருணா ஏஜென்ஸீஸ் அளவெட்டி. 2392

தையல் மெசின்
தையல் கால் மெசின், சிங்கர் இங்கிலிஸ் கபினட் 3 லாச்சிகள், புத்தம்புதியது விற்பனைக்குண்டு. கற்பித்தான் குடிசை, அளவெட்டி தெற்கு. 1992

### தேவை

நெசவாளர்
நெசவு வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். வ. நவரத்தினம், கருணா நெசவுநிலையம் வீமன்காமம், தெல்லிப்பளை. 1968

ஆசிரியர்கள்
தனியார் பாடசாலை ஒன்றிற்கு நடனம், சங்கீதம் [வாய்ப்பாட்டு—கருவி] தையற்கலை, வர்த்தக பாடங்கள் போதிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. தகுதியுடையவர்கட்கு நல்ல எதிர்காலமுண்டு. C/o Eelanadu. 1991

வேலை
கம்மாலை வேலை தெரிந்தவர்களும் கடைச்சல் வேலை தெரிந்தவர்களும் உடன் தேவை. அனுபவமுள்ளவர்களுக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும். விளம்பர இல. 1993, ஈழநாடு மே/பா, த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1993

## அமெரிக்காவின் ஆட்சேபம்

வாஷிங்டன், மே 9 வட வியட்னாமியரால் சிறைபிடிக்கப்பட்ட அமெரிக்க விமானிகள் சென்ற சனிக்கிழமை ஹனோய் வீதிவழியாக நடத்திச் செல்லப்பட்டதற்கு அமெரிக்கா ஆட்சேபம் தெரிவித்துள்ளது.


## கலங்கள் வேறு....
## உள்ளடக்கம் ஒன்றே.

5×5




இடதுபுறத்தில் காணப்படுவது போன்ற புதிய பார்க்கர் சூப்பர் குயிங் காகிதக் கலங்கள் பலவற்றை நீங்கள் விரைவில் காண்பீர்கள். உங்களுக்கு பரிச்சயமான பழைய கலங்களிலும் பார்க்கர் சூப்பர் குயிங் கிடைக்கும் தான். எந்தக் கலத்தைத் தேர்ந்தெடுத்தாலும், கழிவுப் பொருள்களைக் கரைப்பதும் எழுதும் போதே பேனையைத் துப்புரவு செய்வதுமாகிய சோல்வ் - எக்ஸ் என்னும் சேர்மானப் பொருள் கொண்ட ஒரே மையாகிய பார்க்கர் சூப்பர் குயிங் உங்களுக்குக் கிடைக்கும்.




எல்லாப் பேனைக்களுக்கும் சிறந்த மை இதுவே.

மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிட்டெட், பங்க்ஸால் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஓய்வு பெறும் நெசவு நிலைய மேற்பார்வையாளர்

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாணப்பகுதி அரசினர் பிரதம நெசவுநிலைய மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி கனகசபை சென்ற மாதத்துடன் ஓய்வுபெற்றுள்ளார்,

யாழ்ப்பாணத்திலே முதன் முதலாக நெசவுத் தொழிலை ஆரம்பித்த இவர், 1932-ம் ஆண்டில் இந்தியா சென்று காந்தி ஆச்சிரமத்தில் ராஜகோபாலாச்சாரியாரின் கீழ் ''கதர் உற்பத்தி'' பயின்று இலங்கை திரும்பிய பின்னர் நெசவுத்தொழில் நம்நாட்டில் ஒரு தேசியத் தொழிலாக மாறும்வகையில் கடந்த 35 வருடமாக இலங்கையின் பல பகுதியிலும்நெசவு நிலைய மேற்பார்வையாளராகக் கடமையாற்றினர்.

இலங்கை அரசாங்கம் நடாத்திய தொழில் நுட்பப் பரீட்சையில் சித்தியடைந்த முதல் தமிழரான இவர், யாழ்ப்பாணத்தில் முதன் முதல் பட்டு உற்பத்தியில் வெற்றியீட்டிய பெருமையைப் பெற்று இலங்கை அரசாங்கத்தால் பட்டு உற்பத்திப் பயிற்சிக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட முதல் தமிழருமாவார்.

சென்ற மாதத்துடன் தனது 60வது வயதில் ஓய்வுபெற்ற அன்னரது சேவையைப் பாராட்டி நல்லூர் அரசினர் நெசவு ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் ஒரு பிரியாவிடை அளிக்கப்பட்டது. [எஸ்.ரி.]

**வடபகுதி அசைஸ்**

# ''துவக்கினல்குருவி, கொக்கு சுடலாமென்று தெரியாது''

## மூளாய் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், புதன்
''துவக்கினல் குருவி கொக்கு சுடலாம் என்றுஎனக்குத்தெரியாது. துவக்கு ஒரு பெறுமதியான பொருள்என்றும் எனக்குத் தெரியாது. துவக்கினல் கொக்கு குருவி சுடப்பட்டதாக நான்கேள்விப்படவுமில்லை. துவக்கை கடையில் விலைகொடுத்து வாங்க வேண்டும் என்றும் எனக்குத்தெரியாது.''

மூளாய் கொலை வழக்கு ஏழாவது தினமாக நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பப்டபோது, எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் இரகுபதிகுறுக்கு விசாரணைசெய்கையில்ஐயன் கந்தையா மேற்கண்டவாறு கூறினர்.

விசாரணையைப் பார்ப்பதற்காக பாடசாலை மாணவ மாணவிகள் உட்பட கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர்திரு வி.தென்னகோன் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டு வருகிறது.

இவ் வழக்கில் 66-ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி மூளாயில் சுப்பர் முருகேசுவை சுப்பன் கணபதியும், கணபதி தெய்வேந்திரனும் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் பி.இரகுபதி புறக்டர் ஏ.குலநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் எஸ்.தில்லையர் நியமிக்கப் பட்டிருந்தார்.

எதிரிகளின் வழக்கறிஞர் சாட்சியமளித்த கந்தையாவை குறுக்கு விசாரணை செய்தார்.

# கொலைநடந்த இடத்துக்கு கோர்ட்டார் செல்வர்

யாழ்ப்பாணம், புதன்
மூளாய் கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட இடங்களை நேரில் பார்வையிடுவதற்காக இன்றுகாலை ஸ்தலத்திற்குக் கோர்ட்டார் விஜயம் செய்வார்கள்.

நீதியரசர், முடிக்குரிய வழக்கறிஞர், எதிரிகள்சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், ஜூரிசபையினர், சாட்சிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் இன்றுகாலை 9-30 மணிக்கு இங்கிருந்து மூளாய்க்குப் புறப்படுவார்கள்.

கொலையுண்டவரின் மனைவி செல்லம், முத்தாச்சி உட்பட ஆறுசாட்சிகளை, இன்று காலை சம்பவம் நடந்த இடத்திற்கு வரும்படி நீதியரசர் உத்தரவிட்டார்.

கோர்ட்டார் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டுத் திரும்பியபின் விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

---

யாழ்.மாவட்ட மத்திய மகா வித்தியாலயங்களின் 'ட்ருக் அன்ட் பீல்ட்'விளையாட்டுப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் தொடர்ந்து13-ம், 14-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. வடமாகாணத்தில் உள்ள 26 பாடசாலைகள் பங்கு பற்றும் இப் போட்டிகளுக்கு வடமாகாண கல்விப் பகுதி வித்தியாதிபதிதிருமதி ஆர். ஆர். நவரத்தினம் தலைமை வகிப்பார்.

## ஆயிரக் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### எம். பி.க்கு நேர்ந்த ஆபத்து

அக்மீமன எம். பி. திரு. அரம்பவெல தமது வீட்டுக்குள் வெள்ளம் புகுந்து கொண்டதால் மேசைமீது ஒரு நாற்காலியை வைத்து அதன்மீது உட்கார்ந்து கொண்டிருந்த நேரத்தில் அங்கிருந்து மீட்கப்பட்டார்.

நேற்று இப்பகுதி மக்களுக்கு பத்தாயிரம் தொன் பாண் விமானம்மூலம் விநியோகிக்கப்பட்டது. உணவுப் பொட்டலங்கள் இலங்கைவிமானப்படை விமானங்களால் விநியோகிக்கப்பட்டன.

நெல்வயல்கள் நாசமாகிவிட்டன. நெற்பயிர்கள் வெள்ளத்தினல் அடித்துச் செல்லப்பட்டன.

வீதிகள் பலவும் சேதமடைந்துள்ளன. ரயில் சேவையும் துண்டிக்கப்பட்டுள்ளது. களுகங்கை, ஜின்கங்கை, வளவகங்கை, நில்வலகங்கை ஆகியவைகளில் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது. பல இடங்களிலும் மரங்கள் வேருடன் சாய்ந்துவிட்டன

---

### மே. வங்காளத்துக்கு தமிழக மீன்

சென்னை, மே 9
தமிழக மீன் மேற்கு வங்காளத்துக்கு அனுப்புவது சம்பந்தமாக மந்திரிகள் ரீதியிலான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## விவசாய வகுப்பு

புன்னலைக்கட்டுவன்,
செவ்வாய்
ஊரெழு மாதர் முன்னேற்றச் சங்க ஆதரவின்கீழ் கணேச வித்தியாசாலையில் கிராம ரீதியான விவசாய உணவூட்டப் பயிற்சி வகுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது. சுமார் ஐம்பது பெண்கள் கலந்துகொண்டனர். திருநெல்வேலி உணவூட்டத் திட்ட உத்தியோகத்தரான திருவாளர்கள் எஸ். தனபாலசிங்கமும், வீரசிங்கமும் பயிற்சி வகுப்பை நடாத்தினர். சுமார் 10 வகுப்புகள் நடைபெறவிருக்கின்றன. ஒவ்வொரு போயா தினத்திற்கு முன்தினமும் இவ் வகுப்புகள் நடைபெறுமாம். வீட்டுத் தோட்டப்போட்டி ஒன்றும் நடத்தப்படவிருக்கிறது.

---

## காந்திஜியில் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லும் 30 பேர் டாக்டர் சாகீர் ஹுசேனுக்கு வாக்களித்துள்ளனர். ஜனதிபதி பதவிக்கு போட்டியிட்டவர்களில் 8 பேருக்கு ஒரு வாக்கும் கிடைக்கவில்லை. தோல்வியுற்ற மற்றவர்களுக்கும் மிக சொற்ப வாக்குகளே கிடைத்தன.

### ராதாகிருஷ்ணனுக்கு பாராட்டு வைபவம்

அன்று மாலை ஜனதிபதி பதவியிலிருந்து விலகிச் செல்லும் டாக்டர் ராதாகிருஷ்ணன் சென்னைக்குப் புறப்பட்டுச் செல்லவிருக்கிறார். அவரது சேவையைப் பாராட்டும் வகையில் டில்லி ரயில் நிலையத்தில் ஒரு பிரிவுபசார வைபவம் நடைபெறவிருக்கிறது.

### மரண அறிவித்தல்

**மீனும்பிகை சரவணமுத்து**

காலஞ்சென்ற புறக்டர் திரு. வி. எம். சரவணமுத்துவின் மனைவியாகிய மீனும்பிகை நேற்று [9-5-67] காலமானர். இவர் எஸ். தங்கராஜா, அப்புக்காத்து கொழும்பு, எஸ். செல்வராஜா புறக்டர் யாழ்ப்பாணம், எஸ். தர்மராஜா இலங்கைவங்கி கொழும்பு ஆகியோரின் தாயாருமாவார், அன்னரது பூதவுடல் 5, செட்டித்தெரு, நல்லூரிலிருந்து செம்மணி மயானத்துக்கு இன்று பிற்பகல் 4 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.
1778


கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ண [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனேகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபார்ட்
நடராஜன்
திரைப்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: ராமண்ணா

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி—தேவிகா
நடித்த
பழநி

MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
Vincent Price
in
MASQUE OF THE
RED DEATH
(Pathe Colour)

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!

REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
WOMAN WITHOUT A
FACE
(Adults)
9-35p.m.
ஒக்கம சமானய
[சிங்களம்]

யாழ் - அரசினர் வைத்தியசாலை
மனநோயாளர் கட்டிட நிதிக்காக
இன்னிசைக் கச்சேரி
யாழ்ப்பாணம்
லயன்ஸ் இளப்பின்
ஆதரவின்கீழ்
கானசரஸ்வதி
D.K. பட்டம்மாள்
மிருதங்க வித்துவான்
சங்கீத கலாநிதி
பாலக்காடு மணி
14-5-67 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6-15 மணி
யாழ்ப்பாணம்
திறந்தவெளி அரங்கில்
நடைபெறும்.
டிக்கட் விபாம்:- ரூ. 25/- ரூ. 10/- ரூ. 5/-
1777


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு மே மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org